# மாலை முரசு

பக்கங்கள் 20

**வவுனியாவில் இன்று**

## தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம்

- கே. வசந்தரூபன் -

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியா ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 18 ஞாயிற்றுக்கிழமை 05.11.2023 அதிர்வு 97

### கட்சியின் தலைவர் உட்பட

# தமிழரசின் நிர்வாகிகள் தெரிவு ஜனவரி 21 இல்

**அதற்காக விசேட பொதுக்குழு**

**அன்றைய தினம் திருமலையில்**

- ந. லோகதயாளன் -

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த 17 ஆவது தேசிய மாநாடு நான்கரை வருடங்களின் பின்னர் வரும் ஜனவரி 28ஆம் திகதி திருகோண மலையில் நடைபெறவுள்ளது. 04



# அடக்குமுறைக்கு எதிராக தமிழரசுக் கட்சி போராட்டம்



- கே.வசந்தரூபன் -

வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் மீது முன்னெடுக்கப்பட்டு வரும் அடக்குமுறைகளுக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சியினரால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதியில் இன்று காலை10 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. 04

### மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைது!



-கனகராசா சரவணன்-

மட்டக்களப்பு, சித்தாண்டியில் மேய்ச்சல் தரைப் பண்ணையாளர்கள் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 6 பல்கலைக்கழக மாணவர்களை, 04

## நில அபகரிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடரும்

**மாவை திட்டவட்டம்**



- கே.வசந்தரூபன் -

"வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவதற்கு எதிராகத் தொடர்ச்சியான போராட்டங்களை 04

# தமிழர் தரப்பில் பொது வேட்பாளர்

**ஏனைய தமிழ்க் கட்சிகளுடன்**

**பேசுவதற்கு டி.ரி.என்.ஏ. முடிவு**

- ந.லோகதயாளன் -

ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது எனவும், அதற்கு ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவைக் கோருவது எனவும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி (டி.ரி.என்.ஏ.) தீர்மானித்துள்ளது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் 04







# சீனத் தூதுவர் வவுனியாவுக்கு விஜயம்

(கே.வசந்தரூபன் )

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தலைமையிலான குழுவினர் வவுனியாவுக்கு இன்று விஜயம் மேற்கொண்டு சீனாவின் உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

வவுனியா மாவட்ட செயலகத்துக்கு வருகை தந்த சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தலைமையிலான குழுவினரை மாவட்ட மேலதிக அரச அதிபர் தி. திரேஸ்குமார் வரவேற்றார். அவருடைய தலைமையில் சீன அரசால் வடக்கு மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது சீனத் தூதுவர் கீ சென்ஹொங் சீன அரசின் வவுனியா மாவட்டத்துக்கான நிவாரண உதவித் திட்டத்தை வழங்கி ஆரம்பித்து வைத்தார்.

வவுனியா மாவட்டத்தின் வவுனியா, வவுனியா தெற்கு உள்ளடங்களாக 4 பிரதேச செயலக பிரிவுகளுக்குட்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 500 குடும்பங்களுக்குச் சீனாவால் 7 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் முதல் கட்டமாக வழங்கப்படுகின்றது.

சீன பௌத்த விகாரைகள் மற்றும் பௌத்த மக்களால் வழங்கப்படும் குறித்த உலர் உணவுப் பொருட்களை சீனா – இலங்கை பௌத்த நட்புறவுத் திட்டத்தின் கீழ் சீனத் தூதுவர் உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார்.

இந்நிழ்வில் சீனத் தூதுவராலயத்தின் அரசியல் விவகாரங்களுக்கான பொறுப்பதிகாரி, வவுனியா உதவி மாவட்ட செயலாளர் சபர்ஜா, வவுனியா மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர்கள், சீனத்தூதுவராலய அதிகாரிகள் மற்றும் தெரிவு செய்யப் பட்ட பயனாளிகள்ஆகியோர்கலந்துகொண்டனர்.




























# 2023 ஆம் ஆண்டில் இதுவரையில் 69 ஆயிரம் டெங்கு நோயாளர்கள்!

## 39 பேர் உயிரிழப்பு

இலங்கையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 69 ஆயிரத்தைக் கடந்துள்ளது என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த வருடத்தில் இன்று வரை மொத்தமாக 69 ஆயிரத்து 231 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தக் காலப் பகுதியில், கொழும்பு மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.




இந்த மாவட்டத்தில் இதுவரையில் 14 ஆயிரத்து 634 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்தில் 33 ஆயிரத்து 139 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். கடந்த மாதத்தில் 4 ஆயிரத்து 10 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தனர். இந்த மாதத்தில் இன்றுவரை 738 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தில் இதுவரையில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட 39 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், டெங்கு பரவலைத் தடுக்கும் வகையில், தங்கள் சுற்றுப் புறங்களை தூய்மையாக வைத்துக் கொள்ளுமாறும், நுளம்புகள் பெருகும் இடங்களை அழிக்குமாறும் பொது மக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

# விமான சேவை, மின்சார சபைக்கு ரூ. 238.9 பில்லியன் திறைசேரி நிதி!

ஸ்ரீலங்கன் எயாலைன்ஸ் மற்றும் இலங்கை மின்சார சபைக்கு திறைசேரியில் இருந்து 238.9 பில்லியன் ரூபா ஒதுக்கப்படவுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிதியிலிருந்து இலங்கை மின்சார சபைக்கு 129 பில்லியனும் தேசிய விமான சேவைக்கு 109.9 பில்லியனும் ஒதுக்கப்படவுள்ளது.

இரு நிறுவனங்களும் தமது கடன்களைத் தீர்த்து, மறுசீரமைப்பு திட்டத்துக்கு தயாராகும் வகையிலேயே இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் உயர் அதிகாரிகளுடனான நீண்ட கலந்துரையாடலின் பின்னர், ஹர்ஷ டி சில்வா தலைமையிலான நாடாளுமன்ற பொதுக் கணக்குக ளுக்கான குழு இந்த கூடுதல் மதிப்பீட்டை அண்மையில் அங்கீகரித்துள்ளது.

நிதி அமைச்சு இந்த கூடுதல் நிதி மதிப்பீட்டை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




# பாலஸ்தீனுக்கு ஆதரவு தெரிவித்து இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

(நூருல் ஹுதா உமர்)

பாலஸ்தீன சிறார்களுக்காக - பாலஸ்தீனுக்கு ஆதரவாக கொழும்பு நெலும் பொக்குண திரையரங்குக்கு முன்பாக இன்று காலை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்கள் தமது குடும்பம் மற்றும் தமது நண்பர்கள், பிள்ளைகளுடன் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடபட்டனர்.

முஸ்லிம் பெண்களின் தலைமையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தமிழரசின் நிர்வாகிகள்...

எனினும், அதற்கு முன்னோட்டமாகக் கட்சியின் தலைவர் உட்பட புதிய நிர்வாகிகளைத் தேர்வு செய்வதற்காக ஜனவரி 21 ஆம் திகதி கட்சியின் பொதுக்குழு விசேடமாகத் திருகோணமலையில் கூடும்.

இன்று முற்பகல் வவுனியாவில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று அறியவந்தது.

கட்சியின் அடுத்த மத்திய செயற்குழுக் கூட்டம் வரும் ஜனவரி 20ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறும். அதன் போது கட்சித் தலைவர் உட்பட புதிய நிர்வாகிகள் தேர்வுக்கான நியமனங்கள் பற்றி ஆராயப்படும். சுமுகமாகத் தேர்தலின்றி, இணக்கமான தீர்வுகள் ஏற்படுத்த முயற்சிகள், பேச்சுக்கள் அங்கு மேற்கொள்ளப்படும்.

எது, எப்படியாயினும் அடுத்த நாள் 21 ஆம் திகதி கட்சியின் பொதுக்குழு திருகோணமலையில் கூடிக் கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவு மற்றும் தீர்மானங்கள் குறித்து முடிவு எடுக்கும். தெரிவுகளுக்குத் தேர்தல் தவிர்க்க முடியாமல் அமையுமானால் அவையும் அன்று இடம்பெறும்.

அதன் பின்னர் அடுத்த வாரம் ஜனவரி 27ஆம் திகதி கட்சியின் இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி மாநாடுகள் திருகோணமலையில் நடக்கும்.

அதேசமயம் தேவைப்பட்டால் அன்றைய தினமும் கட்சியின் தற்போதைய பொதுக்குழுவின் அமர்வு ஒன்று திருகோணமலையில் முன்னெடுக்கப்படும்.

தொடர்ந்து கட்சியின் தேசிய மாநாட்டை ஒட்டிய பொது அமர்வு அடுத்த நாள் ஜனவரி 28ஆம் திகதி திருகோணமலையில் கோலாகலமாக இடம்பெறும்.

இவை இன்று நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டன என அறியவந்தது.

## தமிழரசுக் கட்சியின்...

தனியார் விருந்தினர் விடுதியில் இன்று நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் மாநாடு, சமகால அரசியல் நிலைமைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

## அடக்குமுறைக்கு எதிராக...

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வடக்கு – கிழக்கில் நில அபகரிப்புக்கள் நிறுத்தப்பட வேண்டும், மயிலத்தமடு மேய்ச்சல் தரையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டவிரோதக் குடியேற்றங்களை உடனே நிறுத்து, செட்டிகுளத்தில் கீழ்மல்வத்தோயா திட்டத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்டுள்ள குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்து, காணாமல் ஆக்கப்பட்டோருக்குத் தீர்வை வழங்கு, இந்து ஆலயங்களை ஆக்கிரமிக்காதே, அவற்றில் விகாரைகளை அமைக்காதே, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுத்து, இஸ்ரேல் – காஸா மோதலை சர்வதேசம் நிறுத்த வேண்டும் போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோஷங்களையும் எழுப்பியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி.சிறிதரன், இரா.சாணக்கியன், தமிழரசுக் கட்சியின் செயலாளர் ப.சத்தியலிங்கம், மாவட்ட அமைப்பாளர் ந.கருணாநிதி மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், புதிய ஜனநாயக மாக்ஸ்சிக லெனினிச கட்சியின் உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## நில அபகரிப்புக்கு...

முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"மயிலத்தமடுவில் தமிழ்ப் பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரையில் சிங்களக் குடியேற்றம் ஏற்படுத்தப்படுகின்றது. இதுபோலவே வடக்கு, கிழக்கில் சிங்கள – பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கடந்த 70 வருடங்களாகத் தமிழ் மக்கள் இனத்தின் விடுதலைக்காக மட்டுமல்ல, தங்கள் தாயக நிலம் பௌத்த, சிங்கள மயமாக்கல் ஆக்கப்படுவதற்கு எதிராகவும் போராடி வந்திருக்கின்றனர்.

எனவே, எமது நிலத்தை விடுவிப்பதற்கும் அதனை ஆக்கிரமிப்பதற்கு எதிராகவும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.

எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள எமது கட்சியின் மாநாட்டிலும் நாங்கள் இன விடுதலைக்காகவும், நில விடுதலைக்காகவும் ஜனநாயக வழியிலான போராட்டங்களை முன்னெடுப்பதற்கான திட்டங்கள் தொடர்பாக ஆராய்ந்து, அதன் பின்னர் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுப்பதற்குத் தீர்மானித்துள்ளோம்.

அரசுக்கு எதிரான இந்தப் போராட்டங்கள் நிச்சயம் தொடரும் என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றேன்." – என்றார்.

## யாழ். பல்கலைக்கழக...

பொதுப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் கீழ் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் பண்ணையாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து, இன்று காலை 9 மணியளவில் சித்தாண்டி முருகன் ஆலயத்துக்கு முன்னால் ஒன்றுகூடியதை அடுத்து, அந்த மாணவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணியாகப் போராட்டம் நடத்தும் பண்ணையாளர்களின் இடம் வரை சென்று, அங்கேயும் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்துள்ளனர்.

இதனையடுத்து, அந்தப் பகுதியில் கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டு, பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டம் முடிவுற்ற பின்னர், மாணவர்கள் பஸ்ஸில் கிழக்கு பல்கலைக்கழகத்தை நோக்கிப் பயணித்த போது, பஸ்ஸைப் பின் தொடர்ந்து சென்ற சந்திவெளி பொலிஸார் பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் வைத்து பஸ்ஸை நிறுத்தி, அதிலிருந்த 6 மாணவர்களைக் கைது செய்துள்ளனர்.

அந்த 6 மாணவர்களும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், அவர்கள் சட்டவிரோதமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை, பொது வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் சந்திவெளி பொலிஸார் மேலும் கூறினர்.

## தமிழர் தரப்பில்...

இன்று மன்னாரில் நடைபெற்றபோதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் பொது வேட்பாளர் விடயத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் ஆதரவைக் கோருவது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஐந்து தமிழ்க் கட்சிகளை உள்ளடக்கிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் இன்று முற்பகல் 10.30 மணியளவில் மன்னாரில் அமைந்துள்ள ரெலோவின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

ரெலோ கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் ஆரம்பமான இந்தக் கூட்டத்தில் ரெலோ சார்பாக அக்கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா), கட்சியின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சி சார்பாக கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், கட்சியின் பொதுச்செயலாளரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், கட்சியின் உப தலைவர் இரா.துரைரெட்ணம், புளொட் கட்சி சார்பாக கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், கட்சியின் பொதுச்செயலாளர் ஆர்.ராகவன், தமிழ்த் தேசியக் கட்சியின் சார்பாக கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறிகாந்தா மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பாக கட்சியின் தலைவர் சிவநாதன் வேந்தன், கட்சியின் பேச்சாளர் கணேசலிங்கம் துளசி, கட்சியின் கிழக்கு மாகாணப் பொறுப்பாளர் நாகலிங்கம் நகுலேஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் கூட்டணியைப் பலப்படுத்தல், சமகால அரசியல் பிரச்சினைகள், ஜனாதிபதி பொது வேட்பாளர், மயிலத்தமடு பண்ணையாளர்கள் பிரச்சினை, மன்னாரில் காணிகள் அபகரிப்பு, மீன் இறக்குமதி விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டன என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.



# தேசியமட்ட தமிழ்த் தினப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாவுக்குத் தங்கம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்வியமைச்சு அகில இலங்கை ரீதியில் ஒழுங்குசெய்திருந்த தேசியமட்ட தமிழ் மொழித் தினப் போட்டியில் பிரிவு 1 (போட்டி இல 15, தரம் 6,7,8) தமிழறிவு குறு வினா எழுத்துப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி மாணவர்கள் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.

வெற்றியீட்டிய மாணவர்களுக்கும் பயிற்றுவித்த தமிழ்த் துறை ஆசிரியர்களுக்கும், பொறுப்பாசிரியை திருமதி. பத்மலோஜினி சிவசிவாவுக்கும் கல்லூரி அதிபர் உள்ளிட்ட கல்வி சமூகம் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளது.

# வவுனியா மாநகர சபையில் உத்தியோகபூர்வ இணையம்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

வவுனியா மாநகர சபையின் உத்தியோக பூர்வ இணையத்தளம் பிரதமர் தினேஷ் குணவர்தனவால் வவுனியா மாநகர சபை மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வட மாகாண ஆளுநர் திருமதி.பீ.எஸ். எம்.சாள்ஸ், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# புத்தளம் - உடப்பு களப்பில் மீனவர் ஒருவரின் சடலம் மீட்பு!

**(ரஸீன் ரஸ்மின்)**

புத்தளம் – உடப்பு களப்பில் இருந்து மீனவர் ஒருவரின் சடலம் ஒன்று நேற்று இரவு மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முந்தல் பொலிஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பத்துளுஓயா, புளிச்சாக்குளம் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 51 வயதுடைய ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார் என்று உடப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை (03) மாலை 6 மணியளவில் உடப்புக்கு செல்வதாகக் கூறிவிட்டு வீட்டைவிட்டு வெளியேறியுள்ளார்.

இவ்வாறு வீட்டைவிட்டு வெளியேறிய மீனவர் நேற்று சனிக்கிழமை (04) வரை வீடு திரும்பவில்லை. இதுதொடர் பில் குடும்பத்தினர் முந்தல் பொலிஸில் முறைப்பாடும் செய்திருந்தனர்.

இந்த நிலையில், சனிக்கிழமை இரவு உடப்பு களப்பு பகுதியில் சடலம் ஒன்று கிடப்பதை அவதானித்த சிலர் அதுபற்றி உடப்பு பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த உடப்பு பொலிஸார் சடலத்தை மீட்டு விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது, சடலமாக மீட்கப்பட்டவர் வெள்ளிக்கிழமை வீட்டைவிட்டு வெளியேறி உடப்புக்கு சென்ற புளிச்சாக்குளம் பகுதியைச் சேர்ந்த மீனவர் என்பது உறுதி செய்யப்பட்டது.

புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரனை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம் ஸ்தல விசாரனைகளை முன்னெடுத்தார்.

அதனையடுத்து, சடலத்தை பிரேத பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் முந்தல் மற்றும் உடப்பு பொலிஸார் மேலதிக விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சஜித் பேசும் சுதந்திரம்

'போரை முடிவுக்குக் கொண்டு வந்தோம்', 'போரை முடிவுக்குக் கொண்டு வந்தோம்' - என்று கூவிக் கூவியே தேசிய வளங்களை ஒரு குடும்பம் - ராஜபக்ஷ குடும்பம் - அபகரித்துள்ளது. சூறையாடி உள்ளது. யுத்தம் முடிந்தாலும் நாடு இன்னும் சுதந்திரம் அடையவில்லை.

- இப்படிக் கூறியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

அவர் கூறுவது உண்மை என்றாலும், அதிலும் சில விடயங்கள் கவனிக்கப்பட வேண்டும்.

இலங்கையில் இன முரண்பாட்டால், பேரினவாதம் சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கி, அவர்களது இருப்பையே அழிக்க முற்பட்டபோது வெடித்த உள்நாட்டு இனப்போர், பேரினத்தவருக்கு சாதகமாக முடிந்துவிட்டது என்பது உண்மைதான். பேரினத்தாரின் யுத்த வெற்றியின் பின் நாடு சூறையாடப்பட்டமை பற்றிப் பேசும் எதிர்க்கட்சித் தலைவர், யுத்த காலத்தில் சூறையாடப்பட்ட நீதி, நேர்மை, உண்மை, சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள், மனித குலத்துக்குரிய அடிப்படை பண்புகள் குறித்தெல்லாம் பேசத் தயாரில்லை.

கொடூரத்தின் மீது கட்டி எழுப்பப்பட்ட யுத்த வெற்றி கொடூர விளைவுகளையே தரும் என்பதில் என்ன அதிசயம் இருக்க முடியும்? அந்த யுத்த வெற்றியே அநீதி, பொய், புரட்டு, அடாவடித்தனம், சூறையாடல், யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மோசமான மனித உரிமை மீறல்கள், ஈவு இரக்கமற்ற மிருகத்தனமான செயல்கள் போன்றவற்றின் மீது கட்டி எழுப்பப்பட்ட போது, அந்த யுத்த வெற்றியைத் தாமும் சேர்ந்து கொண்டாடியவர்தான் இந்த சஜித் பிரேமதாஸவும்.

அநீதி மற்றும் அடக்குமுறை மீதே இந்தப் போரியல் வெற்றி கட்டி எழுப்பப்பட்டிருந்தது என்பது தெரிந்திருந்தும், அதற்கு எதிராகக் குரல் எழுப்ப மறந்து - மறுத்து - அந்த யுத்த வெற்றியைத் தானும் சேர்ந்து கொண்டாடிவிட்டு, இப்போது அந்தக் குரூர யுத்த வெற்றியின் விளைவாக நேர்ந்த சூறையாடல் பற்றி மட்டும் அவர் குரல் எழுப்புவதில் ஒரு நேர்மைப் பண்பு இருப்பதாகக் கருத முடியாது.

அந்தக் கொடூர - குரூர - முறையில் அமைந்த அடக்குமுறை வெற்றிக்கான யுத்தத்தை முன்னெடுத்தவன் நான் அல்லன் என்று மட்டும் ஒரு சமாதானத்துக்காக வேண்டுமானால் அவர் சளாப்பல் விளக்கம் கூறலாம். அவ்வளவுதான்.

யுத்தம் முடிந்தும் நாடு சுதந்திரம் அடையவில்லை என்கிறார் அவர். ஆங்கிலேய காலனித்துவ ஆட்சியாளர்கள் 1948 இல் நாட்டை விட்டு வெளியேறிய பெப்ரவரி 4 ஆம் திகதியின் பின்னரும் கூட இந்த நாடு உண்மையில் சுதந்திரம் அடையவில்லை. அன்று தொடக்கம் பௌத்த - சிங்கள பேரினவாத வெறிப்போக்காளரின் அராஜகமும் அட்டகாசமும் அடக்குமுறையும்தானே இந்த நாட்டின் ஆட்சி முறையாகத் தொடர்ந்து கட்டவிழ்கின்றன. அப்படி இருக்கையில், சஜித் பிரேமதாஸ எந்த சுதந்திரம் குறித்துப் பேசுகிறார்? பேரினவாத அடக்குமுறை கட்டுமட்டின்றிப் பேயுருக் கொண்டு காட்டுத் தர்பாராக தலைவிரித்தாடும் ஆட்சி முறை குறித்தா?



## 200 மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி!

(வி.ரி. சகாதேவராஜா)

கல்முனை றோட்டரிக் கழகத்தால் 200 மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட 58 மாணவர்களுக்கு முதல் கட்டமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு கழகத் தலைவர் றோட்டரியன் ஏ.எல்.ஏ. நாசர் தலைமையில் கல்முனை உவெஸ்லி உயர்தர கல்லூரி மண்டபத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதில் கழகத்தின் முன்னாள் தலைவர்கள் றோட்டரியன் எஸ். புஷ்பராசா, றோட்டரியன் மு. சிவபாதசுந்தரம், றோட்டரியன் வி. விஜயசாந்தன், றோட்டரியன் ந. றதீசன, அங்கத்தவர் றோட்டரியன் எம். அமிர்தசங்கர், பாடசாலை அதிபர் எஸ். கலையரசன் ஆகியோர் பங்குபற்றினர்.



## புத்தளத்தில் வெள்ள அனர்த்தம்' 15 குடும்பங்கள் பெரும் பாதிப்பு!

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளம் காரணமாக 15 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் முந்தல் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தாராக்குடிவில்லு கிராம சேவகர் பிரிவில் 4 குடும்பங்களைச் சேர்ந்த 20 பேரும், அங்குனவில கிராம சேவகர் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 18 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், ஆனமடு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சங்கட்டிக்குளம் கிராமத்தில் 06 குடும்பங்களைச் சேர்ந்த 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், அவர்களின் உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தேவையான உதவிகளை முந்தல் மற்றும் ஆனமடுவ ஆகிய பிரதேச செயலகங்கள் முன்னெடுத்து வருகின்றன.

### வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்."

- மார்ட்டின் லூதர்
(ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)





# திருகோணமலையில் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு 22.5 மில். ரூபா உதவி!

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 22.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட 736 விவசாயிகளுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு, காசோலை மற்றும் புதிதாக விவசாய ஓய்வூதிய திட்டத்தில் இணைந்து கொண்ட விவசாயிகளுக்கான பற்றுச் சீட்டு வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை திருகோணமலை மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட செயலகம், கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் ஊடாக 2022, 2023 பெரும்போகத்தில் பயிர் காப்புறுதி செய்த மற்றும் அரசால் வழங்கப்படும் மானிய காப்புறுதியின் ஊடாகவும் வெள்ளம், வறட்சி, யானை அழிவு, நோய்கள், பீடைகளாலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈட்டு கொடுப்பனவு காசோலையும், புதிதாக விவசாய ஓய்வூதிய திட்டத்தில் இணைந்து கொண்ட விவசாயிகளுக்கான பற்றுச் சீட்டும் வழங்கி வைக்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 736 விவசாயிகளுக்கான 22.5 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதில் 47 விவசாயிகளுக்கான காசோலை வழங்கப்பட்டது. ஏனைய விவசாயிகளின் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு அவர்களின் வங்கி கணக்கில் வைப்பில் இடப்பட்டுள்ளது என்று கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபை உதவி பணிப்பாளர் கே.எல். அன்சார் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக விவசாய பணிப்பாளர் கருணைநாதன், கமநல சேவைகள் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர், கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதி சபையின் உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# அம்பாறையில் மரம் நடுகை!

(அ.அஸ்வர்)

தேசிய வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் தேசிய மட்டத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் அம்பாறை மாவட் டத்தில் மரம் நடும் நிகழ்வு அண்மையில் மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது, மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ். எம். சஃப்ராஸ், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச். பி. அனீஸ், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் சுஜீவ விரசிங்க, அம்பாறை மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் சமுர்த்தி உத் தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தேசிய மட்ட தமிழ்த் தின போட்டியில் தங்கப் பதக்கம்



( வி.ரி. சகாதேவராஜா)

2023 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட தமிழ் மொழி தினப் போட்டியில் காரைதீவு இராம கிருஷ்ண மிஷன் பெண்கள் வித்தியாலய மாணவி ராஜேந்திரகுமார் மகோற்ஷபி நான்காம் பிரிவு சிறுகதை ஆக்கத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

இவர் அம்பாறை மாவட்ட கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் ராஜேந்திரகுமார், தாதிய பரிபாலகி பவளேந்தினி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியாவார்.




# மாந்தை மேற்கில் வாசிப்பு மாதத்தில் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு 'வாசிப்பை நேசிப் போம் புத்தகங்களை நண்பர்கள் ஆக்குவோம்' எனும் தொனிப்பொருளில் வியாழக்கிழமை (02) புத்தக கண் காட்சியும் விற்பனையும் இடம்பெற்றன.

அடம்பன் மத்திய மகா வித்தியா லயத்தில் மாந்தை மேற்கு பிரதேச செய லாளர் டி.சி.அரவிந்தராஜ் தலைமையில் இது இடம்பெற்றது.

மாந்தை மேற்கு பிரதேச செயல கத்தில் இருந்து பாடசாலை மாணவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நடைபாவனியாக பாடசாலையை வந்தடைந்தனர்.

அதனைத் தொடர்ந்து பாடசாலை முன்றலில் பிரதேச செயலக உத்தியோ கத்தர்கள் ஏற்பாட்டில் வீதி நாடகம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து பாடசாலை மண்டபத்தில் புத்தகக் கண்காட்சி இடம் பெற்றது.

இப்புத்தக கண்காட்சி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பிரதேச செயலகப் பணியாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கண்காட்சியில் பல புத்தகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டதோடு விற்பனையும் இடம்பெற்றது.





# பாண்டிருப்பு வித்தியாலயத்துக்கு ஒலிபெருக்கி சாதனம் கையளிப்பு!

**(எம்.ஏ.ஏ.அக்தார்)**

கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தின் நீண்டநாள் தேவைகளுள் ஒன்றான ஒலிபெருக்கி சாதனத்தை 1994 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலையில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து பாடசாலை நிர்வாகத்திடம் வழங்கியுள்ளனர்








# துணுக்காய் பிரதேசத்தில் முதியோர் தின நிகழ்வுகள்

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலகத்தின் முதியோர் தின நிகழ்வுகள் வியாழக்கிழமை துணுக்காய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றன.

பிரதேச செயலகத்தின் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தோர் கஜிந்தன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக துணுக்காய் பிரதேச செயலாளர் ச.லதுமீரா கலந்து கொண்டார்.



சிறப்பு விருந்தினர்களாக துணுக்காய் பிரதேச செயலக கணக்காய்வாளர் கு.சஜீபன் முல்லைத்தீவு, மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் தசரத ராஜ குமாரன், பூநகரி சமூக சேவை உத்தியோகத்தர் ச.ரேணுகா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக முல்லைத் தீவு தேசிய முதியோர் செயலக மாவட்ட இணைப்பாளர் ஜெயானந்தன், மல்லாவி வர்த்தக சங்க தலைவர் தர்மலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் மூத்தோர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.





# அம்பாறையில் இலக்கிய சாஹித்திய விழா!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கலாசார அலுவல்கள் திணைக்களமும், அம்பாறை மாவட்ட செயலகமும் இணைந்து ஒழுங்கு செய்திருந்த இவ் வருடத்துக்கான இலக்கிய சாஹித்திய விழா அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மாவட்ட ரீதியில் கவியரங்கம், நாட்டுப் புற பாடல், பாடல், நாடகம் மற்றும் பாடல் எழுதுதல் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் கலாசார விழுமியங்களைச் சித்தரிக்கும் பல நிகழ்வுகள் இங்கு மேடையேற்றப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், பிரதேச செயலர்கள் திணைக்களத் தலைவர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், கவிஞர்கள், பாடகர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# புத்தளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு உதவி

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் மாவட்டத்தில் வறட்சி, வெள்ள அனர்த்தம் மற்றும் காட்டு யானைகளால் சேதமடைந்த வேளாண்மை காணிகளின் உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு புத்தளம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது, புத்தளம் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 24 பேருக்கு 17 லட்சத்து 83 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடாக வழங்கப்பட்டது.

அமைச்சர் மஹிந்த அமரவீர பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈட்டுத் தொகை தொகையை வழங்கினார்.

இந்த நிகழ்வில் கால் நடை வள இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத், புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிந்தக அமல் மாயாதுன்ன, புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ். பி.ஹேரத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, நுரைச்சோலை பகுதியிலுள்ள விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் மஹிந்த அமரவீர, கற்பிட்டி நுரைச்சோலை பகுதிக்கும் விஜயம் செய்து மாதுளை விவசாய நடவடிக்கைகளைப் பார்வையிட்டார்.



# தாதியருக்கான செயலமர்வு

(அ.அஸ்வர்)

“சிறுவர் பாதுகாப்பில் தாதியர்களின் சமூகப் பொறுப்பு” எனும் தலைப்பில் தாதிய உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் அம்பாறை தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இடம்பெற்றது.

அம்பாறை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தச் செயலமர்வில் அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம பிரதான உரையை நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மேலதிக மாவட்ட செயலாளர் வி. ஜெகதீசன், தாதியர் பயிற்சிக் கல்லூரி அதிபர் ஏ.எம்.நிமல், விசேட வைத்திய நிபுணர் சமீர ருவன்பிரியா, தாதியர் கல்லூரியின் விரிவுரையாளர்கள், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள், தாதி உத்தியோகத்தர்கள், பயிலுநர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் நூலக உத்தியோகத்தர் கௌரவிப்பு

(எம்.ஏ.ஏ.அக்தார்)

தென் கிழக்கு பல்கலைக் கழகத்தின் 27 வருடங்கள் பூர்த்தி தினத்தை முன்னிட்டு நூலகத்தில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கரால் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு தென் கிழக்கு பல்கலைக் கழக கேட்போர் மண்டபத்தில் இடம்பெற்றது. உப வேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கர், நூலகர் எம்.எம் றிபாயுத்தீனுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

தொடர்ந்து ஏனைய உத்தியோகத்தர்களுக்கும் ஞாபகார்த்த சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வுக்கு பதிவாளர், பீடாதிபதிகள், நிதியாளர், பராமரிப்பு பொறியியலாளர், சிரேஷ்ட உதவி நூலகர்கள் மற்றும் ஏனைய சக நூலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# பெண் முயற்சியாளருக்கு வாழ்வாதாரம்

(அ.அஸ்வர்)

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் தேசிய நிலையத்தில் தையல் நிலையத் திறப்பு விழாவும், பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கும் நிகழ்வும் வியாழக்கிழமை நடைபெற்றன.

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் தேசிய நிலைய உதவிப் பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு தையல் நிலையத்தை திறந்து வைத்தார்.

கௌரவ விருந்தினர்களாக வேல்ட் விசன் திட்ட முகாமையாளர் மக்டலன் குயின்டஸ், அரச சார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர் சி.சத்திய சீலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



இதன்போது வலுவூட்டல் மற்றும் வாழ்வாதார உதவி வழங்கல் செயற்றிட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு வாழ்வாதார உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் கீழ் செயற்படும் இலங்கை பெண்கள் பணியகமானது பெண் தலைமை தாங்கும் மற்றும் கணவனை இழந்த பெண்களை மேம்படுத்துவதற்கான பல்வேறு செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.





# கடல் காவு கொண்டுள்ள தம்பிலுவில் சமாதி ஆலயம்!

(காரைதீவு சகா)

திருக்கோவில் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள மிகவும் மோசமான கடலரிப்பை அடுத்து நேற்று முன்தினம் (3) அதிகாலை தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஸ்தாபகர் அமரர் தம்பையா சுவாமிகளின் சமாதி ஆலயம் கடலுக்குள் காவு கொள்ளப்பட்டுள்ளது.

தம்பையா சுவாமிகளின் சமாதி ஆலயம் சேதமாக்கப்பட்டு சமாதியும், சிவன்சிலையும் கடலுக்குள் இழுத்துச் செல்லப் பட்டுள்ளன.

கடந்த சில நாள்களாக அங்கு இடம்பெற்று வந்த மோசமான கடலரிப்பால் திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலய சூழல் மற்றும் தம்பையா சமாதி ஆலயமும் கடலுக்குள் காவு கொள்ளப்படும் பாரிய அபாயம் நிலவி வந்தது.

குருகுலப் பணிப்பாளர் கண இராஜரத்தினம் அறிந்து உடனடியாக பிரதேச செயலாளருக்கும், கடலோர பாதுகாப்பு திணைக்கள மாகாணப் பணிப்பாளர் பொறியியலாளர் கே.துளசிதாசனுக்கும் அறிவித்திருந்தார் .

மாகாண பணிப்பாளர் பொறியியலாளர் கே.துளசிதாசன் உடனடியாக செயலபட்டு 100 மண் மூடைகளை ஏலவே பரப்பப்பட்டிருந்தன. நாளை திங்கட்கிழமை கல்லணை போடுவதற்கு தயாராக இருந்த வேளையில், இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

அந்த பிரதேசத்திலுள்ள தென்னந்தோப்பில், இதுவரை சுமார் 200 தென்னை மரங்கள் மற்றும் 12 கிணறுகள் இதுவரை கடலரிப்பால் காவு கொள்ளப்பட்டுள்ளன.



# கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்க புதிய நிர்வாகம்!

(அபு அலா)

கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் நேற்று (04) மட்டக்களப்பு பலநோக்கு கூட்டுறவு சங்க கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் பி.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த பொதுச்சபைக் கூட்டத்தில் மட்டக்களப்பு, கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது, தொழிற்சங்கத்தால் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் பற்றிய விடயங்கள் பேசப்பட்டன. இதை அடுத்து புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

இன்றைய கூட்டத்தில் பின்வரும் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக ஏ.எல்.எம். பாறூக், செயலாளராக பி.ரி. ஆதம்பாவா, பொருளாளராக கே. சசிதரன், உப தலைவராக எஸ். ஜாபீர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.நிர்வாக சபை உறுப்பினர்களாக பி. தியாகராஜா, எச்.எம்.கே. ரஹ்மான், ஏ.அமலராஜா ஆகியோர் தெரிவு செய் யப்பட்டனர்.

இந்த கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற் சங்கத்தின் நிர்வாக சபையின் ஆயுள் காலம் 3 வருடங்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மட்டு. தனியார் பல்கலைக்கழகம் மீண்டும் முன்னாள் ஆளுநரிடம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு புனாணையில் நிர்மாணிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகம் பல வருடங்களுக்குப் பின் மீண்டும் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநரும், மட்டக்களப்பு பல்கலைக்கழக தவிசாளருமான எம்.எல்.ஏ எம். ஹிஸ்புல்லாஹ்ஹிடம் நேற்று உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஈஸ்டர் குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து அரசால் கையகப்படுத்தப் பட்ட, பல்கலைக்கழகம் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது.

இந்த நிலையில் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தை மீளவும் திறப்பது தொடர்பில் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார்.




அவரின் கோரிக்கையைப் பரிசீலனை செய்து , இராணுவத்தினரை அண்மையில் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறியிருந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானத்துக்கு அமைய கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஜனாதிபதியின் பிரதிநிதியாக வருகை தந்து இப் பல்கலைக்கழக கட்டடத்தின் திறப்பை சம்பிரதாய பூர்வமாகக் கையளித்தார் .

# அன்னமலை வைத்தியசாலையில் இரண்டு மாடிக் கட்டடம் கையளிப்பு!

(நூருல் ஹுதா உமர்)

உலக வங்கியால் அமுல்படுத்தப்பட்டு வரும் செயற்றிட்டத்தின் கீழ் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் தெரிவு செய்யப்பட்டு அன்னமலை பிரதேச வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் ஏனைய சிகிச்சைகளுக்கான இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டது. இந்தக் கட்டடம் நேற்று (04) ஆம் திகதி உத்தியோக பூர்வமாக கையளிக் கப்பட்டது.

அன்னமலை பிரதேச வைத்திய சாலையின் வைத்திய அதிகாரி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம் றிபாஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். விசேடமாக முன்னாள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் தற்போதைய மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமான டாக்டர் ஜீ. சுகுணன் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பணிமனையின் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம். சீ. எம். மாஹிர் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார்.








# டயக்கோனியா அமைப்பின் அதிகாரி கல்முனை பாடசாலைக்கு விஜயம்

(நூருல் ஹுதா உமர், அஸ்ஹர் ஆதம்)

டயக்கோனியா அமைப்பின் ஆசியப் பிராந்தியத்தின் ஐந்து நாடுகளுக்கும், மத்திய கிழக்கில் உள்ள மூன்று நாடுகளுக்கும் பொறுப்பான தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த பிராந்திய தொடர்பாடல் அதிகாரி திருமதி வனீவ்னா தங்சத்தியன் ரப்ஹப் (ரீனா) கல்முனைக்கு விஜயம் செய்துள்ளார்.

கல்முனை கல்வி வலயத்தில் உள்ள இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.ஜி.எம். நிசாத் அழைப்பின் பேரில் வியாழக்கிழமை பாடசாலைக்குச் சென்றுள்ளார்.

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி மற்றும் டயகோனியா அமைப்பின் ஆதரவில் புனர் நிர்மாணம்



செய்யப்பட்ட சிறுவர் சமாதான பூங்கா, மற்றும் பாடசாலையின் ஒரு பகுதியாக இயங்கி வரும் "கிரீன்வீச்" ஆங்கில பாலர் பாடசாலை போன்றவற்றையும் பார்வையிட்டதோடு, கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட வேலை திட்டங்களின் முன்னேற்ற நிலைமைகள் பற்றியும் பார்வையிட்டார்.

இந்நிகழ்வில் டயக்கோனியா நிறுவனத்தின் இலங்கைக்கான செயற்திட்ட முகாமையாளர் திருமதி நிஷாந்தினி மற்றும் பாடசாலையின் பிரதி அதிபர், பகுதி தலைவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# சிறுவர் கழகங்களை வலுப்படுத்த விளையாட்டு உபகரணம் வழங்கல்

(நூருல் ஹுதா உமர்)

நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம் மற்றும் சமுர்த்தி திணைக்களம் என்பன நாட்டின் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவையும் உள்ளடக்கும் வகையில் தேசிய மட்டத்தில் இருந்து கிராமிய மட்டம் வரை சகல வாய்ப்புக்களையும் சிறுவர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கில் சிறுவர் குழுக்கள் அல்லது கழகங்களை அமைத்துள்ளது.

அந்தவகையில், இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் உள்ள சிறுவர் குழுக்கள், கழகங்களை மீளமைத்தல் மற்றும் மாணவர்களுக்கான விஷேட விழிப்புணர்வு செயலமர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

மகிழ்ச்சிகரமான சிறுவர் கழங்களை உருவாக்கி அவற்றின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக உருவாக்கும் வகையில் சிறுவர் கழக உறுப்பினர்கள் உள்ள பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி. பி. யஷோதாவின் ஒருங்கிணைப்பில் வழங்கப்பட்டன.

விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கும் பிரதான நிகழ்வு உதவி பிரதேச செயளாலர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் இடம் பெற்றது.

உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப், முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர்.எம். இம்டாட் மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.ஐ. பஸீனா ஆகியோரும் விளையாட்டு பொருள்களை பாடசாலை பொறுப்பாசிரியர்களிடம் வழங்கினர்.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VANRENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882



# மட்டு. தனியார் பல்கலைக்கழகத்தை பார்வையிட்டார் ரவூப் ஹக்கீம் எம்.பி.

(அஸ்ஹர் ஆதம் )

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டார்

மட்டக்களப்பிலுள்ள தனியார் பல்கலைக்கழக வளாகத்தை நேற்று அவர் சென்று பார்வையிட்டார்.

இவருடன் நாடாளுமன்ற உறுப்பினர் அலி ஸாஹிர் மௌலானா மற்றும் பல்கலைக்கழக நிறுவுநர் முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆகியோரும் சென்றிருந்தனர்.



# காரைதீவுப் பிரதேச முதியோர் திருமலைக்குச் சமயச் சுற்றுலா!

(அப்துல்சலாம் யாசீம்)

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள காரைதீவு பிரதேசத்தை சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட முதியவர்கள் நேற்று (04) திருகோணமலை மாவட்டத்துக்குச் சமயச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டனர்.

வெருகல் சித்திர வேலாயுத சுவாமி கோவில் , கங்குவேலி அகத்தியர் தாபனம் சிவன் கோவில், கோணேஸ்வரர் கோவில், இலட்சுமி நாராயணன் கோவில், காளி கோவில் கன்னியா வெந்நீர் ஊற்று முதலிய இடங்களையும் பார்வையிட்டனர்.

திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கப் பணிமனைக்கும் முதியோர்கள் வருகை தந்ததுடன் மாவட்டத்தில் காணப்படும் முக்கிய கோயில்கள் குறித்தும் புராண கால வரலாறுகள் குறித்தும் கலந்துரையாடினர்.

இதன் போது திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவர் சண்முகம் குகதாசன் மூத்தோரை வரவேற்று அவர்களுக்கு மதிய உணவு வழங்கினார்.





# இரண்டாவது இலத்திரனியல் நூலகம் பல்லவராயன்கட்டில் திறந்து வைப்பு!





(அ.அஸ்வர்)

பூநகரி பிரதேச சபை தனது இரண்டாவது இலத்திரனியல் நூலகத்தை பல்லவராயன்கட்டில் மக்களின் பயன்பாட்டுக்காக அண்மையில் திறந்து வைத்துள்ளது.

கணினிக்கூட அங்குரார்ப்பணம், சிறார்கூட கையளிப்பு, பல்லவம் இதழ் – 05 வெளியீடு மற்றும் பரிசளிப்பு நிகழ்வு என்பன பல்லவராயன்கட்டு உப அலுவலக பொறுப்பதிகாரி லக்ஷன்டயானி தலைமையில் நடைபெற்றன.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அண்மையில் பூநகரி வாடியடியிலுள்ள பொது நூலகத்தில் இலத்திரனியல் நூலகத்தை மக்களின் பயன்பாட்டுக்காக பூநகரி பிரதேச சபை கையளித்திருந்தது.

இந்த நிலையில், இரண்டாவதாக ஜெயபுரத்திலுள்ள பல்லவராயன்கட்டு பொது நூலகத்தில் கணினிக் கூடத்தை மக்களின் பயன்பாட்டுக்காக கையளித்துள்ளது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ரி.துஷ்யந்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உத்தியோக பூர்வமாக கணணிக் கூடத்தை திறந்து வைத்தார்.

இதன்போது தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்த அதே வேளை சிறார்கூடமும் திறந்து வைக்கப்பட்டது.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றது.

ஏற்கனவே இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவை அமைப்பால் பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட வாடியடி மற்றும் பல்லவராயன்கட்டு பொது நூலகங்கள் இவ்வாண்டிலேயே தரமுயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# மூதூர் பிரதேச செயலர் பிரிவில் வலுவிழந்தோருக்கு விழிப்புணர்வு

(ஹஸ்பர்)

மூதூர் பிரதேச செயலகம் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் ஏற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரனையின் உதவியுடன் மூதூர் பிரதேச செயலக பிரிவில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று (04) பேர்ல் ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வளவாளராக கலந்து கொண்ட கால்நடை வைத்திய அதிகாரி எம்.ஏ.எல். ரத்தீபா, ஆரோக்கியமான உணவு முறைகள் பற்றியும் அதனை எவ்வாறு செய்வது தொடர்பாகவும் விளக்கமளித்தார்.

மாற்றுதிறனாளி பிள்ளைகளுடன் பெற்றோர்களுக்கு ஏற்படும் சவால்களுக்கு உளவள ஆலோசனை வழங்கப்பட்டது.

கால் நடை அபிவிருத்தி போதனாசிரியர் பேரின்ப சிவம், கால் நடைகளைப் பாதுகாப்பது தொடர்பாக இதன்போது விளக்கமளித்தார்.

இந்த நிகழ்வில் அங்கவீனமுற்ற தேசிய செயலகத்திலிருந்து சமூக சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர் மற்றும் மாவட்ட உளவள துணை உத்தியோகத்தர் மற்றும் பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# சந்நிதியான் ஆச்சிரமத்தில் இந்த வார நிகழ்வில் 4 லட்சத்து 47 ஆயிரம் ரூபா பெறுமதியில் உதவி!

சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வாக இன்னிசை விருந்தும் 4லட்சத்து 47 ஆயிரத்து 500 ரூபா செயற்றிட்ட உதவி வழங்கலும் நேற்று முன்தினம் (03) இடம்பெற்றன.

காரைநகர் கிழவன்காடு கலாமன்ற கலைஞர்களின் இன்னிசை விருந்து இடம்பெற்றது.

திருவாசக்குயில் செல்வி லீலாவதி இராசரத்தினத்தின் பாடல்களுடன் வயலின் – நுண்கலைமானி திருமதி கோகுலரூபன் நிக்ஸ்சனா, மிருதங்கம் – கலாவித்தகர் பரிபூரானந்தன் விக்கினேஸ்வரன் ஆகிய அணிசெய் கலைஞர்களுடன் இன்னிசை விருந்து இடம்பெற்றது.

இதில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கு 4 லட்சம் ரூபா பெறுமதியான போட்டோ கொப்பி இயந்திரம் வழங்கப்பட்டது.

பாடசாலை அபிவிருத்திச் சபையின் நிறைவேற்றுக்குழு செயலாளர் சி.தயானந்தராசா, ஆசிரியர்களான த.ரதீஸ்வரன், சி.ஜெயபிரதாபன் முன்னிலையில் இது கையளிக்கப்பட்டது.

அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தரம் – 06 இல் கல்வி கற்கும் அச்செழு பிரதேசத்தை சேர்ந்த மாணவிக்கு 47 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சைக்கிள் வழங்கப்பட்டது.

ஆச்சிரமத்தின் முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வாராந்த நிகழ்வில் வைத்து இவற்றை வழங்கினார்.









# அட்டாளைச்சேனையில் தொழில் சந்தைத் திட்டம்!

**(எம். எப். நவாஸ் )**

மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம், அம்பாறை மாவட்ட செயலகம், அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் இணைந்து பிரதேச தொழில் சந்தை நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை அட்டாளைச்சேனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடத்தின.

பிரதேச செயலர் எம். ஏ. சி. அகமது ஷாபிரின் நெறிப்படுத்தலில் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபீர் தலைமையில் நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்ச்சியில் தனியார் நிறுவனங்கள் மற்றும் வேலை வாய்ப்பு பிரிவு, இளைஞர் யுவதிகள் பங்கு கொண்டனர்.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலக மனிதவள அபிவிருத்தி இணைப்பாளர் அருளானந்தம், திறன் அபிவிருத்தி இணைப்பாளர் நடனகுமார், அட்டாளைச்சேனை பிரதேச செயலக நிர்வாக உத்தியோதர் கே வீ. சலீம், பிரதேச செயலக எச். ஆர். டீ.ஓ. ஏ. எல். தமீம், திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜீவக்குமார், இறக்காம பிரதேச செயலக திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹனீபா மற்றும் அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரி பதிவாளர் எம். ஏ. சி. றகீப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தமிழக மீனவர்கள் 8 பேர் மீது தாக்குதல்: கடல் கொள்ளையர்கள் மீண்டும் அத்துமீறல்!



இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து, தமிழக மீனவர்கள் 8 பேர் மீது தாக்குதல் நடத்தி, 2 லட்சம் ரூபா மதிப்பிலான பொருட்களை இலங்கை கடல் கொள்ளையர்கள் கொள்ளைய டித்துச் சென்றுள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம் பாடியை அடுத்த புதுப்பேட்டையைச் சேர்ந்தவர் செந்தில்குமார் என்பவர் தனது பைபர் படகில்மேலும் மூன்று மீனவர்களுடன் கோடியக்கரையில் தங்கி, மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்தார்.

இவர்கள் கோடியக்கரைக்கு கிழக்கே மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, நேற்று அதிகாலை படகு ஒன்றில் வந்த கடல்கொள்ளையர்கள், செந்தில்குமார் படகில் ஏறி, மீனவர்களை தாக்கியுள்ளனர்.

அத்துடன், மின்கலம், ஜி.பி.எஸ். கருவி, மின்விளக்கு மற்றும் 50 ஆயிரம் மதிப்பிலான மீன்களைக் கொள்ளைய டித்துச் சென்றுள்ளனர்.

இதனையடுத்து மீனவர்கள் 4 பேரும் கரைக்குத் திரும்பினர். காய மடைந்த செந்தில்குமார், மதன், சிவகுமார் ஆகியோர் நாகை அரசு மருத் துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதேவேளை, நாகை மாவட்டம் வானவன்மகாதேவி மீனவர்காலனியைச் சேர்ந்த சிதம்பரம் என்பவர் தனது பைபர் படகில், அதே பகுதியைச் சேர்ந்த சிவக்குமார், முகுந்தன், கிருஷ்ணசாமி ஆகியோருடன் நேற்று அதிகாலை கோடியக்கரைக்கு கிழக்கே 15 நாட்டிக்கல் மைல் தொலைவில் மீன்பிடித்துக் கொண டிருந்தார்.

அங்கு வந்த கடல் கொள்ளையர்கள், மீனவர்கள் 4 பேரையும் தாக்கி, 200 கிலோ வலை, ஜி.பி.எஸ். கருவி, மின்கலம், கையடக்க தொலைபேசி, மின்விளக்கு மற்றும் 60 கிலோ மீன்கள் என 1.50 லட்சம் மதிப்பிலான பொருட்களை கொள் ளையடித்துச் சென்றுள்ளனர்.

இந்த மீனவர்கள் நேற்று காலை வானவன்மகாதேவி கடற்கரைக்கு வந்து சேர்ந்தனர். இதுகுறித்து கீழையூர் கடலோரக் காவல் படை பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

இலங்கை கடல் கொள்ளையர் களின் தொடர் அத்துமீறல்கள், தமிழக மீனவர் களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

# வளி மாசடைவு காரணமாக டில்லியில் ஆரம்ப பாடசாலைகளை மூட உத்தரவு



இந்திய தலைநகர் டில்லியில் காற்றின் தரம் மோசமடைந்துள்ளதால் அனைத்து ஆரம்ப பாடசாலைகளையும் நவம்பர் 10 திகதி வரை மூடுவதற்கு அரசு உத்தர விட்டுள்ளது.

இதற்கான உத்தரவினை டில்லி கல்வித்துறை அமைச்சர் அதிஷி தனது சமூகவலைத்தள பக்கத்தில் வெளியிட் டுள்ளார்.

அந்த பதிவில் அவர் மேலும் தெரி விக்கையில், டில்லியில் காற்று மாசு தரம் தொடர்ந்து அபாய கட்டத்தில் இருப்பதால், அனைத்து ஆரம்ப பாடசா லைகளுக்கும் நவம்பர் 10 திகதி வரை விடுமுறை அறிவிக்கப்படுகிறது. 6-12 வரையுள்ள வகுப்புகளுக்கு பாடசாலைகள் இணைய வகுப்புகளுக்கு மாறும் விருப்பம் அளிக்கப்படுகிறது என்று தெரி வித்துள்ளார்.

முன்னதாக, அனைத்து அரசு மற்றும் தனியார் தொடக்கப் பள்ளிகள் நவம்பர் 2 ஆம் திகதி வரை மூடுவதற்கு டில்லி அரசு உத்தரவிட்டிருந்தது. டில்லி மாநகராட்சி அதன் உத்தரவு ஒன்றில், நவம்பர் 3,4 ஆகிய திகதிகளில் ஆரம்ப வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை கற்பித்தலை இணைய வழியில் நடத்த ஆசிரியர்களைக் கேட்டுக்கொண்டது.

இதனிடையே தலைநகர் டில்லியில் காற்றின் தரம் கடுமையானதாக மாறி யது. அதனைத் தொடர்ந்து எந்த முன்னேற்றமும் இல்லாமல் அப்படியே நீடித்தது. இன்று காலை 7 மணி நிலவரப்படி டில்லியின் ஒட்டுமொத்த காற்றின் தரம் 460 என்ற மோசமான நிலையிலேயே இருந்தது.

நேற்று டில்லியின் சராசரி காற்றின் தரம் 415 ஆக இருந்தது. டில்லியின் அண்டை நகரங்களான நொய்டா, குருகிராம, தேசிய தலைநகர் பகுதிக ளிலும் வெள்ளிக் கிழமை காற்றின் தரம் மோசமாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐ.நாவின் தங்குமிடங்களை இலக்கு வைத்த இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பலர் பலி!



காசாவில் போர் தீவிரமடைந்து வருகிறது. இந்த நிலையில், ஐ.நாவால் நடத்தப்படும் தங்குமிடம் மற்றும் வைத்தியசாலைகளின் மீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவின் ஹமாஸ் அமைப்புக்கும் இஸ்ரேல் இராணுவத்திற்கும் இடையில் கடந்த 7 ஆம் திகதி ஆரம்பமான போர் 30 ஆவது நாளை கடந்து நீடித்து வருகின்றது.

வான்வழித் தாக்குதலை மேற்கொண்டு வந்த இஸ்ரேல் இராணுவம் காசாவிற்குள் நுழைந்து தரைவழித் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் ஐ.நாவால் நடத்தப்படும் தங்குமிடம் மற்றும் வைத்தியசாலைமீது இஸ்ரேல் இராணு வம் நேற்று நடத்திய தாக்குதலில் பொது மக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

காசா நகருக்கு வடக்கே ஐ.நாவால் நடத்தப்படும் தங்குமிடத்தை குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் நேற்று வான்வழித் தாக்குதல் நடத்தியள்ளது.

இந்த தாக்குதலில் 20 பேர் பலியாகியுள்ளனர் என முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

மேலும் காசா நகரில் உள்ள நாசர் வைத்தியசாலையின் வாயிலில் நேற்று நடத்தப்பட்ட மற்றுமொரு தாக்குதலில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மேதத் அப்பாஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகளின் நிவாரண மற்றும் பணி நிறுவனத்தின் தங்கும் தாக்கப்பட்டுள்ளது என ஐ.நா தெரிவித்துள்ளது. இதனால், காசாவில் தற்போது மக்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு இடம் எதுவுமில்லை எனவும் பலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும், இந்த தாக்குதலில் இருப்பிடத்தை இழந்த மக்கள், ஐ.நா கட்டங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் விமானப்படை தளம் மீது தாக்குதல் நடத்திய 9 பேர் சுட்டுக் கொலை



பாகிஸ்தானின் பஞ்சாப் பகுதியில் மியான்வாலி என்ற இடத்தில் உள்ள விமானப் படை பயிற்சி மையத்தில் நேற்று காலை 9 தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தினர். இதில் 3 விமானங்கள் சேதம் அடைந்தன.

இதையடுத்து விமானப்படை தளத்தில் பாகிஸ்தான் இராணுவத்தினர் தேடுல் நடத்தியுள்ளனர். இதன்போது 9 தீவிரவாதிகளை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

தீவிரவாத தாக்குதலில் சேதம் அடைந்த 3 விமானங்களும், பயன்பாட்டில் இல்லாத பழைய விமானங்கள் எனவும், பயன்பாட்டில் உள்ள விமானப் படை விமானங்கள் எதுவும் சேதம் அடையவில்லை என்றும் பாகிஸ்தான் இராணுவம் கூறியுள்ளது.

இந்த தாக்குதலுக்கு தெக்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் என்ற தீவிரவாத அமைப்பு பொறுப் பேற்றுள்ளது.

இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள இடைக்கால பிரதமர் அன்வருள் ஹக் காகர், 'பாதுகாப்பு படையினர் மீது தாக்குதல் நடத்தும் முயற்சி முறியடிக்கப்படும்' என தெரிவித்தார்.

பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் சர்பரஸ் புக்தி கூறுகையில், 'பாகிஸ்தானை நிலைகுலையச் செய்ய நடைபெறும் சதிதான் இந்த தீவிரவாத தாக்குதல் என்றார்.

பாகிஸ்தானில் இந்தாண்டின் முதல் 9 மாதங்களில் நடைபெற்ற தீவிரவாத தாக்குதல்களில் பாகிஸ்தான் வீரர்கள் 386 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், வன்முறையின் மையமாக பலுசிஸ்தான் இருக்கிறது என்றும் பாகிஸ்தானில் உள்ள பாதுகாப்பு கற்கைகள் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.